ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்

# THE COVAI MAIL

SREE Annapoorna SREE Gowrishankar

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 49 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 6-12, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-


## ஹை-டெக் ஆக மாறப்போகும் கவுண்டம்பாளையம் அரசுப் பள்ளி!

# ரூ.3 கோடிக்கு அரசுப் பள்ளியை தத்தெடுத்த மார்டின் குழுமம்!





S. MARTIN
Chairman
Martin Group of Companies



**Smart Classrooms, Turf Ground,**
**புதுப்பிக்கப்பட்ட கட்டமைப்புகள் என ஜொலிக்கபோகும் அரசுப் பள்ளி!**



அடிக்கல் நாட்டினார் டாக்டர் லீமா ரோஸ் மார்டின்!



மகிழ்ச்சியில் மாணவர்கள் பெற்றோர்கள்!

# அதிகாரத்தை அதிகரிக்க சைலன்ட் மிரட்டலா?

**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் திமுக 70 சதவீத வெற்றிகளையும், அதிமுக 15 சதவீத வெற்றிகளையும், சுயேச்சைகள் 15 சதவீத வெற்றிகளையும் பெற்றுள்ளனர். மேலும், திமுக 43 சதவீத வாக்குகளையும், அதிமுக 25 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளது. திமுக மற்றும் அதிமுக இடையே கிட்டதட்ட 18 சதவீதமும், திமுக மற்றும் அதிமுக அணிகளுக்கு இடையே 25 சதவீதமும் வாக்கு வித்தியாசம் உருவானது மாநிலம் முழுவதும் அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் இடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ஜெயலலிதா மறைவுக்குப்பின் 2019 மக்களவைத் தேர்தல், 2019 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல், விடுபட்ட 9 மாவட்டங்களில் நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலோடு, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலையும் சேர்த்தால் தொடர்ந்து 5 வது தோல்வியை அதிமுக சந்தித்திருப்பது அக்கட்சி தொண்டர்களிடையே மனவருத்தத்தை உருவாக்கியுள்ளது.

இதன் விளைவு அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா, டி.டி.வி.தினகரன் உள்ளிட்ட நிர்வாகிகளை மீண்டும் இணைத்துக்கொண்டு கட்சியை வலுப்படுத்த வேண்டும் என தேனி மாவட்டத்தில் இருந்தே அதுவும், அதிமுக தலைமை ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் பண்ணைத் தோட்டத்தில் நடந்த கூட்டத்தில், பன்னீர்செல்வத்தின் மனசாட்சியான சையதுகான் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது மாநிலம் முழுவதும் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து சசிகலாவை மீண்டும் அதிமுகவில் இணைக்க பன்னீர்செல்வம் முயற்சி எடுக்கிறாரோ என்ற தோற்றம் அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் இடையே எழுந்தது. அதிமுகவில் அனைத்து தரப்பினரும் முடிவு செய்த பிறகு, அமமுக தொண்டர்களின் முடிவுக்கு கட்டுப்படுவேன் என்று டிடிவி.தினகரனும் கருத்து தெரிவித்தார். ஆனால், எவ்வித கருத்தும் தெரிவிக்காத சசிகலா, தென்மாவட்டங்களில் திடீர் சுற்றுப்பயணம் செய்யத்திட்டமிட்டுள்ளார்.

சசிகலாவை கட்சியில் சேர்க்க பன்னீர்செல்வம் மனதார முயற்சி செய்கிறாரா என்பதை கடந்த கால அவரது செயல்பாடுகளில் இருந்து ஆய்வு செய்தால், 2021 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னர், சசிகலாவை அதிமுகவில் இணைக்க வேண்டும் என்ற தோற்றத்தை காட்டினார். அதற்கு ஆதரவாக சில குரல்களும் வந்தன. ஆனால், மோடியும், எடப்பாடி பழனிசாமியும் சசிகலாவை அதிமுகவில் இணைக்கக்கூடாது என உறுதியாக இருந்ததால் அது நடக்கவில்லை.

அதேவேளை அதிமுகவுக்கும், சசிகலாவுக்கும் தொடர்பு இல்லை என்பதை காட்டுவதற்காகவே சசிகலா தனது காரில் அதிமுக கொடியை பயன்படுத்தக்கூடாது என்றும், ஜெயலலிதா நினைவு இல்லத்துக்கு செல்லக்கூடாது என்பதற்காக அதை பூட்டியும் வைத்தார். தேர்தல் முடிந்த பிறகு, சசிகலாவை கடும் வார்த்தைகளால் விமர்சனம் செய்தார்.

இவ்வாறாக இருக்க ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு வளையம் இல்லை. காரணம், எதிர்கட்சித் தலைவர் தேர்தலின்போது, கட்சியில் இருக்கும் 66 எம்.எல்.எ.க்களில் 60 பேர் எடப்பாடி பக்கம் தான் நின்றனர். அதேபோல, சசிகலாவுக்கு எதிராக தீர்மானம் போடச் சொன்னபோது மூன்று மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் எதிராகவே தீர்மானம் போட்டனர்.

இவ்வாறாக பன்னீர் செல்வத்தின் பலம் குறைவாக இருந்தாலும், கட்சியில் செங்கோட்டையன் போன்ற தலைவர்கள் அதிகாரம் செலுத்தக்கூடாது என்பதற்காக தொண்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர்கள் என்ற வியூகத்தை வகுத்தார் எடப்பாடி பழனிசாமி. இதன் விளைவு, 10 சதவீத நிர்வாகிகள் பலம் கொண்ட ஓ.பன்னீர்செல்வம், கட்சியில் 50 சதவீதம் அதிகாரம் கொண்ட பங்குதாரராக மாறினார். தற்போது, ஓ.பன்னீர்செல்வம், மீண்டும் சசிகலாவை பயன்படுத்தி அதிகார அரசியலை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதிமுக பலவீனப்பட்டதா என ஆய்வு செய்வது அவசியம். 1996, 2006 உள்ளாட்சித் தேர்தல்களில் அதிமுக எந்த அளவு வெற்றியை கொடுத்ததோ அதே அளவு வெற்றியை தான் கொடுத்துள்ளது. அதிகார பலம், பெரிய அளவு பணம் செலவு செய்யாமல் 25 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக 33 சதவீதம் வாக்குகளை அதிமுக பேரவையில் பெற்றிருந்தாலும், நகர்பகுதிகளில் நிச்சயம் 30 சதவீதத்துக்கும் கீழ் தான் இருக்கும். இந்நிலையில், அதிமுக வாக்கு வங்கியில் பெரிய அளவில் சேதாரம் ஆகவில்லை. இதற்குமே கடந்த முறை அதிமுக கூட்டணியில் இருந்த பாஜக தனித்து நின்றதால்தான் அதிமுகவுக்கு சேதாரம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல, தொடர் தோல்விகள் எனும் கணக்கை எடுத்துப் பார்த்தால் 2004 மக்களவைத் தேர்தல், 2006 சட்டப்பேரவைத் தேர்தல், 2006 உள்ளாட்சித் தேர்தல், 2009 மக்களவைத் தேர்தல் என தொடர்ந்து 4 தோல்விகளை சந்தித்த அதிமுக, பென்னாகரம் இடைத்தேர்தலில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு வைப்புத் தொகையை கூட இழந்தது. அப்படி இருந்த அதிமுக, 2011 இல் தேமுதிக கூட்டணியோடு மிகப்பெரிய வெற்றியை பெற்று ஆட்சிக்கு வந்தது.

அதேபோல, 2011 சட்டப்பேரவைத் தேர்தல், 2011 உள்ளாட்சித் தேர்தல், 2014 மக்களவைத் தேர்தல், 2016 சட்டப்பேரவைத் தேர்தல் என தொடர்ந்து 4 தோல்விகளை சந்தித்து ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு வைப்புத்தொகையை இழந்தது. ஆனால், 2021 பேரவைத் தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வந்தது திமுக.

தமிழக அரசியலில் இந்த அளவுகோல்களை வைத்துப் பார்க்கும்போது, தொடர் தோல்வியில் இருக்கும் அதிமுக, திமுகவுக்கு போட்டி சக்தியாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வலுவான கூட்டணி அமைத்து ஏன் வெற்றி பெற முடியாது என்ற கேள்வி எழுகிறது. அதிமுகவின் கட்டமைப்பை பொறுத்தவரை ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் சேர்ந்து இருந்தால் மட்டுமே இரட்டை இலை தொடர்ந்து இருக்கும். இதில் ஒருவரை தவிர்த்துவிட்டு, மற்றொருவரால் முக்கிய முடிவை எடுக்க முடியாது.

சசிகலா விவகாரத்தை பொறுத்தவரை சசிகலாவை கட்சிக்குள் சேர்க்கக்கூடாது என எடப்பாடி உறுதியாக இருக்கிறார். அப்படி இருக்கும்போது ஓ.பன்னீர்செல்வம், அதிமுகவுக்குள் சசிகலாவை கொண்டுவருவது இயலாத காரியம். அதற்கான முயற்சி செய்தால் இரட்டை இலைக்கு வேட்டு வைப்பது போன்ற சூழல் உருவாகும். அந்த சூழல் ஏற்பட்டால் அது எடப்பாடி பழனிசாமிக்கு குறைந்த நஷ்டம் தான். ஆனால், ஓ.பன்னீர்செல்வத்துக்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்படக்கூடும்.



**சசிகலாவை கட்சிக்குள் சேர்க்கக்கூடாது என எடப்பாடி உறுதியாக இருக்கிறார். அப்படி இருக்கும்போது ஓ.பன்னீர்செல்வம், அதிமுகவுக்குள் சசிகலாவை கொண்டுவருவது இயலாத காரியம். அதற்கான முயற்சி செய்தால் இரட்டை இலைக்கு வேட்டு வைப்பது போன்ற சூழல் உருவாகும். அந்த சூழல் ஏற்பட்டால் அது எடப்பாடி பழனிசாமிக்கு குறைந்த நஷ்டம் தான். ஆனால், ஓ.பன்னீர்செல்வத்துக்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்படக்கூடும்.**

இதற்கு காரணம், கொங்கு மண்டலம், வடதமிழகத்தில் இருக்கும் ஒட்டுமொத்த நிர்வாகிகள், தொண்டர்கள் எடப்பாடி பழனிசாமியின் தீவிர ஆதரவாளர்களாக இருக்கின்றனர். கொங்கு மண்டலத்தில் 30 சதவீதம் உள்ள கொங்கு வேளாளர் கவுண்டர்களின் முழுஆதரவும், 10.5 சதவீதம் கொடுத்ததால் வடதமிழகம் மற்றும் கொங்கு மண்டலத்தில் உள்ள வன்னியர்களின் பெரும்பான்மை ஆதரவையும் எடப்பாடி பழனிசாமி பெறக்கூடும். ஆனால், தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் பன்னீர்செல்வம் குறிவைக்கும் முக்குலத்தோர் வாக்கு வங்கி என்பது அமமுக, திமுக என பிரிந்து போகவே வாய்ப்பு அதிகம்.

ஒருவேளை இரட்டை இலையில் கையெழுத்து போடும் அதிகாரத்தை பயன்படுத்தி சசிகலா விஷயத்தில் இரட்டை இலையை முடக்க ஓ.பன்னீர்செல்வம் முயற்சி செய்தால், எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிக எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் இருப்பதை கணக்கு காட்டி இரட்டை இலையை எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைத்துவிட்டால் அதுவும் பன்னீர்செல்வத்துக்கு இழப்பு தான்.

எனவே, தங்களுக்கு இழப்பு ஏற்படும் விஷயத்தை பன்னீர்செல்வமோ அல்லது எடப்பாடி பழனிசாமியோ எடுக்கப்போவதில்லை. தொடர்ந்து சசிகலாவை ஆயுதமாக பயன்படுத்தி அதிமுகவில் தனது 50 சதவீத அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளும் உத்தியையே ஓ. பன்னீர்செல்வம் செய்து வருகிறார் என்பது தான் அரசியல் விமர்சகர்களின் கருத்து.

### இருவருக்குமே நஷ்டம்

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, அதிமுகவைப் பொறுத்தவரை யாரை நீக்க வேண்டுமானாலும் சேர்க்க வேண்டுமானாலும் ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் ஆகிய இருவரும் சேர்ந்தே ஒரு முடிவெடுக்க முடியும்.

ஈருடல் ஓருயிராக செயல்பட்டால் மட்டுமே அதிமுக ஒன்றுபட்டு இருக்கும். எடப்பாடி பழனிசாமி சசிகலாவை சேர்க்கவே கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார். பன்னீர்செல்வமோ சசிகலாவை பயன்படுத்தி தனது முக்கியத்துவத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்.

இதைவிட சசிகலாவை அதிமுகவில் சேர்க்க வேண்டும் எனும் எண்ணம் பன்னீர்செல்வத்திற்கு பெரிய அளவில் இருப்பதாக தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழலில் இந்த விஷயத்தில் ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் ஆகியோருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அது இருவருக்குமே நஷ்டமாக முடியும். இது ஓபிஎஸ், இபிஎஸ் இருவருக்கும் நன்றாகவே தெரியும், ஆகையால் சசிகலா விஷயத்தில் இதற்கு மேல் பெரிய அளவு பிரச்சனையை ஓபிஎஸ் கிளப்ப மாட்டார். மத்திய பாஜகவும் சசிகலாவுக்கு ஆதரவாக எந்த நகர்வையும் செய்யவில்லை. ஆகையால் இந்த விஷயம் இதோடு நிறைவடைந்து விடும்.

---

## பி.எஸ்.ஜி மருத்துவமனையில்
# உலக உடல் பருமன் தினம் அனுசரிப்பு

**தி கோவை மெயில்**

உலக உடல் பருமன் தினம் ஆண்டுதோறும் மார்ச் 4 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. தற்போதைய மருத்துவ ஆராய்ச்சி ஒன்று இந்தியாவில் மட்டுமே 135 மில்லியன் மக்கள் உடல் பருமனால் பாதிக்கபட்டுள்ளனர் எனக் கூறுகிறது.

மேலும், கிராமப்புற மக்களோடு ஒப்பிடுகையில் நகர்ப்புற பெண்கள்தான் ஆண்களை விட அதிக எடை மற்றும் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிக உடல் பருமனால் பாதிக்கப்பட்டவர்கள் வரிசையில் இந்திய மாநிலங்களுள் தமிழ்நாடு ஐந்தாம் இடத்திலும், புதுச்சேரி இரண்டாம் இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

உலக உடல் பருமன் தினத்தையொட்டி பி.எஸ்.ஜி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்ற அறுவை சிகிச்சை துறையின் சார்பில் உடல் பருமன் மேலாண்மை மற்றும் அதன் பன்முகத்தன்மை கொண்ட அணுகுமுறை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை உணவியல் நிபுணர் கவிதா வரவேற்புரை வழங்கினார்.

உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்ற அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பாலமுருகன் தனது உரையில், உடல் பருமன் விழிப்புணர்வு தினத்தின் அவசியத்தைப் பற்றி கூறினார். தற்போது உடல் பருமன் என்பது ஒரு நோயாக பார்க்கப்படுகிறது எனவும், உடல் பருமனைக் கட்டுக்குள் வைத்தால் வேறு எந்த நோயும் ஏற்படாது எனவும் பேசினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பி.எஸ்.ஜி மருத்துவமனையில் உடல் பருமன் அறுவை சிகிச்சை மேற்கொண்ட வெற்றியாளர்கள் தங்களது எடை குறைத்தல் பயணத்தில் ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்ட ஆவணப்படக் காணொளி திரையிடப்பட்டது.



பி.எஸ்.ஜி மருத்துவமனையில் உடல் பருமனுக்கான சிகிச்சை மேற்கொண்டவர்களுடன், (வலமிருந்து இடம்) டாக்டர் வி.ஜி மோகன் பிரசாத், டாக்டர் புவனேஸ்வரன், டாக்டர் சுரேஷ்பாபு, டாக்டர் பாலமுருகன்.

கண் மருத்துவ ஆலோசகர் மற்றும் பொது அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் Rtn. சுரேஷ்பாபு (ஜீவன் டே கேர் சென்டர், ஊட்டி) கௌரவ விருந்தினராக நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக கோயம்புத்தூர் வி.ஜி.எம் இரைப்பை மையத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் வி.ஜி மோகன் பிரசாத், (இரைப்பை குடல் மருத்துவர், ஹெப்பட்டோலோஜிஸ்ட், சிகிச்சை என்டோஸ்கோபிஸ்ட்) கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் டாக்டர் வி.ஜி.மோகன் பிரசாத் பேசுகையில்: உடல்பருமன் உடையவர்களின் பிரச்சினைகளை யாரும் புரிந்து கொள்வதில்லை எனக் கூறிய அவர், சமுதாயம் அவர்களை புறந்தள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தினார்.

மேலும், உடல் எடை குறைப்பின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். உணவு உண்ணும் போது நாவை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், தண்ணீர், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

நவீன சமூகத்தில் நமது வாழ்க்கை முறை மாற்றம் அடைந்து வருகிறது. அதனாலும் உடல் பருமன் ஒருவருக்கு ஏற்படுகிறது. எனவே வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை கடைபிடிப்பது அவசியம்.

உடல் எடை கொண்ட ஒருவருக்கு உடல் பருமன் அறுவை சிகிச்சை மட்டுமே போதுமானது அல்ல. அவர் முறையான உணவுப் பழக்கத்தையும், உடற்பயிற்சியையும் பின்பற்ற வேண்டும்.

தற்போதைய இளைஞர்கள் அதிக நேரம் டிஜிட்டல் திரையிலேயே இரவில் தங்களது நேரத்தை செலவிடுகின்றனர். இது தூக்கமின்மைக்கும், உடற்பருமனுக்கும் வழிவகுக்கிறது. எனவே, இரவு நேரத்தில் நல்ல தூக்கம் அவசியம் என்பதைக் குறிப்பிட்டு பேசினார்.

பி.எஸ்.ஜி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் புவனேஸ்வரன் இந்த நிகழ்ச்சியின் வாழ்த்துரையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், நோயாளிகள், உடல் பருமன் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள், மருத்துவ ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

---




**தி கோவை மெயில்**

கோவை ஈஷா யோகா மையத்தில் விமர்சையாக கொண்டாடப்படும் மகா சிவராத்திரி இந்த ஆண்டும் உற்சாகத்துடன் துவங்கி நடைபெற்றது. பெரும்திரளான பக்தர்கள் மற்றும் ஆன்மீக வாதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இந்திய மக்களவையின் சபாநாயகர் ஓம் பிர்லா, பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை, நடிகை கங்கனா ரனாவத் உள்ளிட்ட பிரபலங்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் சத்குரு "எல்லோருக்கும் வணக்கம், வரவேற்பு" என்று தமிழில் பேசி தன் உரையை ஆரம்பித்தார். கொரோனா பெருந்தொற்றிற்கு பின்னர் இயல்பான வாழ்க்கை எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு இப்போது நிகழும் நிகழ்வு ஒரு சிறிய 'டெமோ' வாக இருக்கலாம் என்ற அவர், அனைவரும் தொடர்ந்து முகக்கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டார். இது ஒரு ஒளிமயமான இரவு என்றார்.

அவர் கூறியது போலவே அந்த முழு வளாகமும் பிரமிக்கவைக்கும் சிவபெருமானின் சிலையும் அலங்கரிக்கப்பட்ட மின்விளக்குகளுடன், தீபங்களோடு ஒளிமயமான மாலை பொழுதாகவே காட்சியளித்தது.



மேலும் அவர் பேசுகையில், கடந்த 2 ஆண்டுகள் அனைவருக்குமே மிகவும் சவாலானதாக இருந்துள்ளது எனவும், அத்துடன் பருவநிலைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது, நாடுகளுக்கிடையே பெரும் போர் துவங்கியுள்ளது, நம் மண்ணும் (soil) பாழாகி வருகிறது என்றார்.

இவற்றை செய்யும் மனிதர்கள் யாரும் கெடுதல் செய்யவேண்டும் என்று செய்வதில்லை. அவர்கள் மனதில் அறியாமை குடிகொண்டுள்ளது. அதுதான் அப்படி செய்யச்செய்கிறது. எனவே மனதில் ஒளிவிளக்கை ஏற்றினால் கண்டிப்பாக இதை வெல்லமுடியும் என்றார்.

இத்தனை துன்பங்களுக்கு நடுவே நாம் அனைவரும் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டியது, நம் வாழ்க்கையில் மிகவும் மகத்தானது 'வாழ்க்கை' மட்டும் தான் என்பதையே. பணம், பொருள் அனைத்தும் மாயை தான் என்றார்.

*SRH launches Covai's 1st Vertigo Diagnosis & Treatment center*

# Correct treatment for Vertigo can be life-changing

*Dr.Anita Bhandari, Clinical Director, NeuroEquilibrium.*

The Covai Mail

It is alarming to know that over 15% of Indian population experience some form of Vertigo and dizziness caused due to balance disorders, and yet the awareness about this condition or its diagnosis and treatment has not reached the larger population.

Vertigo is a sign of a condition that can make one feel like the environment around is spinning or moving when in fact, there is no such movement at all. People suffering vertigo will experience unsteadiness/ imbalance, a feeling of spinning often when bending down, when handing something upwards, turning in bed, etc.

This sensation can interfere with the daily activities of an individual, and it becomes extremely difficult for them to perform the simplest of tasks. This can also cause the affected to fall and get injured.

NeuroEquilibrium is a pioneer in diagnosing and treating Vertigo. Its Clinical Director, Dr. Anita Bhandari,who was in Coimbatore recently shared that vertigo is prevalent in both the rural and urban areas. She expressed that age is no factor here when it comes to being affected with vertigo. She said that the youngest patient she has come across with Vertigo was around 4 years of age, and the highest was 97. Speaking about the causes she said it can occur due to about 40 different diseases of the inner ear, the brain and the central nervous system. While it can be present in both men and women, Dr.Anita shared that women are slightly more likely to get it than men. While it appears dangerous, on a positive note, she said that with the correct treatment, this condition can be managed greatly, and even be cured.

"Problem is that people think that there is no cure for this. They just think that they have to live with it, and when they have it, take medicines. This goes on for years and affects their whole life," she opined. She underlined that identifying the root cause of vertigo and providing correct treatment in the form of medicine and rehabilitation can bring a significant difference and improvement in the lives of patients.

Dr.Anita's company NeuroEquilibrium Diagnostic Systems has introduced the finest medical infrastructure in India to diagnose and treat vertigo in the last 5 years. Recognizing the pioneering works done by NeuroEquilibrium in different parts of the country and beyond our borders, Swathy Rohit who currently serves as the Chief Operating Officer of SNR Sons Charitable Trust, Coimbatore took efforts to set up a super-speciality diagnosis and treatment center for the evaluation and treatment of vertigo and balance disorders at Sri Ramakrishna Hospital.

This specialized vertigo clinic is the 150 center for NeuroEquilibrium. The clinic utilizes advanced diagnostic equipment to diagnose and treat all causes of dizziness and balance disorders with customized medical treatment and vestibular rehabilitation after diagnosing the underlying cause of vertigo and balance disorders to ensure better outcomes.

The treatments vary for patients, as a series of tests have to be done first to find out what is the cause of vertigo. It will be in sessions, and the testing takes 1.5 hours, they are totally non-invasive (no cuts or punctures). Imaging equipment will be placed to monitor the nerve activity in the head and ear region, and after that the right mode of treatment will be recommended. Dr.Anita shared that half of her patients do not require much medication at all.

The launch of the center took place on Friday at Sri Ramakrishna Hospital in the presence of D.Lakshminarayanaswamy, Managing Trustee, R.Sundar, Joint Managing Trustee, SNR Sons Charitable Trust, Rajneesh Bhandari, MD of NeuroEquilibrium, Dr.Sukumaran, Dean, Dr.Ashokan, Chief Neurologist and C.V. Ramkumar, CEO, Sri Ramakrishna Hospital.




*From Left: Dr.Ashokan, Rajneesh Bhandari, Dr. Anita Bhandari, Swathy Rohit and Dr.Sukumaran launching the clinic.*



*From Left: Rajneesh Bhandari, Dr. Anita Bhandari, Swathy Rohit, D.Lakshminarayanaswamy, R.Sundar during the launch of NeuroEquilibrium's services.*

> **"Problem is that people think that there is no cure for this (vertigo). They just think that they have to live with it, and when they have it, take medicines. This goes on for years and affects their whole life"**
>
> *- Dr.Anita Bhandari*

## Shopsy's big plan for 2023

The Covai Mail

Shopsy, a social commerce platform from Flipkart, has witnessed strong growth of over 60% since its launch in July 2021.

Today, Shopsy has over 2.5 lakh sellers with products across 250+ categories and is on track to enable over 25 million online entrepreneurs by 2023. Shopsy aims at boosting local entrepreneurship and powering e-commerce especially in communities and third-party channels. By providing a simplified social media interface, Shopsy is able to overcome user apprehension concerned with trust and authenticity issues while shopping online. Leveraging their local network, Shopsy users are able to share catalogues of a wide selection of over 150 million products offered by Flipkart sellers over social media and communication apps.

## Amway supplements in enjoyable format

The Covai Mail

Amway India, one of the country's leading FMCG Direct Selling companies, for the first time ever introduced a range of nutrition supplements in trendy, simplified, convenient and simplified formats like flavorful gummies and mouth dissolving jelly strips under its flagship brand Nutrilite.

Designed to suit modern lifestyles, especially of the busy young millennials, this range of on-the-go nutrition supplements is all set to further strengthen Amway's nutrition portfolio.

## KASC felicitates PM Rally Participant




*CUO Gary Christo, a member of the 4 TN Battalion NCC and a student of Kongunadu Arts and Science College took part in the Republic Day Camp & PM Rally held at New Delhi January. C. A. Vasuki , Secretary of Kongunadu Arts and Science College appreciated Gary Christoz.*

## Consume Good Quality Protein - Britannia

The Covai Mail

A study by ICMR in 2020 pointed out that only a meagre five per cent of rural Indians and 18 per cent of the urban populace in the country consume the recommended amount of good quality proteins. Britannia aims to educate consumers about the role of Britannia Cheese as a source of good quality protein. Made with the goodness of cow's milk, two slices of Britannia Cheese are equivalent to one glass of milk, or 35g of paneer, in terms of protein content. Cow's Milk is also known to have the highest quality of protein amongst vegetarian sources.

The brand thus aims to encourage Indian parents to include Britannia Cheese as a rich and delicious source of good quality protein as part of their children's diet.






# ALLEN Career Institute

## 17 TIMES ALL INDIA RANK-1

## ...It's all about Trust

in IIT-JEE (Main & Advanced) & Pre-Medical Entrance Exams in Last 12 Years From Classroom



Sitting (L-R): Tejaswin Jha AIPMT 2014 | Nalin Khandelwal NEET 2019 | Soyeb Aftab NEET 2020 | Mridul Agarwal JEE(Adv.) 2021 JEE (Main) 2021 | Kartikey Gupta JEE(Adv.) 2019

Standing (L-R): Ayush Goel NEET 2013 | Lokesh Agarwal AIPMT 2010 | Het Sanjay Shah NEET 2016 | Nishita Purohit AIIMS 2017 | Kavya Chopra JEE (Main) 2021 | Pulkit Goyal JEE (Main) 2021 | Siddhant Mukherjee JEE (Main) 2021 | Guramrit Singh JEE (Main) 2021 | Aman Bansal JEE(Adv.) 2016 | Anshul Verma JEE (Main) 2021 | Chitraang Murdia JEE(Adv.) 2014

## ADMISSION ANNOUNCEMENT (Session 2022-23)

JEE (Main+Adv.) | NEET (UG) | JEE (Main) | NTSE | KVPY | OLYMPIADS | Class 6th to 12th & 12th Pass

Target : IIT-JEE/NEET (UG) 2024
**NURTURE BATCH**
Class 10th to 11th Moving Students

Target : IIT-JEE/NEET (UG) 2023
**ENTHUSIAST COURSE**
Class 11th to 12th Moving Students

Target: Class 6th to 10th
**PRE NURTURE & CAREER FOUNDATION**

Starting From: 7th APRIL 2022

(Get Scholarship Upto 90% Through ASAT)
Online ALLEN Scholarship Admission Test (ASAT) on
13th & 23rd Mar. 2021

To Apply online Log on to www.allen.ac.in or walk-in to nearest ALLEN Center for Application Form | Direct Admission also available | 9900963850, 9606071654

ALLEN® | ALLEN DIGITAL | ALLEN CAREER INSTITUTE OVERSEAS | ALLEN GLOBAL STUDIES DIVISION | ALLEN IntelliBrain® Experiential Experimental Edutaining | ALLEN Europe

ALLEN CAREER INSTITUTE KOTA (RAJASTHAN) — path to success

**ALLEN COIMBATORE CENTER**
#35, 7th street Tatabad, Gandhipuram
Coimbatore-641012, Tamilnadu
**Email:** coimbatore@allen.ac.in
**Tel :** 9900963850, 9606071654

**ALLEN SOUTH REGIONAL OFFICE**
#36, 15th cross, 3rd Block, Near Southend Circle
Jayanagar, Bengaluru-560011, Karnataka
**Email :** bengaluru@allen.ac.in
**Tel :** 080-46704000

**CORPORATE OFFICE:**
"SANKALP", CP-6, Indra Vihar,
Kota (Raj.) INDIA, 324005.
**Tel.:** 0744-2757575
**Web:** www.allen.ac.in